# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 142/2013**

பெயர் : மணி நாள் : 04.01.2023

வா.சா.1 – 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.1 – மணி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.47</u>

நான் அசல் வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கான சர்வே எண் 96/1 ஆகும். வழக்கு சொத்துக்கள் ஆதியில் எனது பாட்டி பழனியம்மாளுக்கு பாத்தியப்பட்டது. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 14 செண்ட் ஆகும். எனது தகப்பனார் பொரப்பகவுண்டர் மற்றும் எனது பாட்டி பழனியம்மாள் ஆகியோர்கள் இருசாயி அம்மாளுக்கு 3 ஏக்கர் 57 செண்ட் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், கொடுத்துள்ளார்கள். அதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. இருசாயி அம்மாளுக்கு செம்மலை(எ) செம்மண்ணன், வட்டமலை(எ)வையாபுரி, கந்தசாமி என்று மூன்று ஆண் பிள்ளைகள் என்றால், சரிதான். செம்மலை(எ) செம்மண்ணனின் வாரிசுகள்தான் 2, 3 பிரதிவாதிகள் என்றால், சரிதான். வட்டமலை(எ) வையாபுரியின் வாரிசுகள் கணேசன், பன்னீர்செல்வம், சங்கர், நிர்மலா, பட்டுரோஜா, குபேரன் ஆகியோர்கள் என்றால், சரிதான். பன்னீர்செல்வத்தை தவிர மற்ற நபர்களிடமிருந்து 2, 3 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால், சரிதான். அதனால்தான் பன்னீர்செல்வத்தை தவிர மற்றவர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான்.

2) நான் வழக்கு சொத்தின் வடபுறத்தில்தான் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கு சொத்தில் ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறேன், வழக்கு சொத்தில் ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது. ஆழ்துளை கிணற்றுக்கு மின் இணைப்பு வசதி இல்லை. 1 ம் பிரதிவாதி எனது அண்ணன் என்றால், சரிதான். எனது அண்ணன் வழக்கு சொத்தின் வடபுறத்தில் குடியிருந்து வருகிறார். வழக்கு சொத்தில் 2 ம் பிரதிவாதி ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால், சரிதான். அதேபோல் செல்வம் என்பவரும் 2 சிமெண்ட் அட்டை வீடுகள் மற்றும் ஒரு ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால், சரிதான். நான் வழக்குரையில் 2, 3 பிரதிவாதிகள் குடியிருந்து வரும் வீடுகளை

குறிப்பிட்டுள்ளேன். அதேபோல் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்தில் ஒரு அட்டை வீடு, ஒரு ஆழ்துளை கிணறு உள்ளது என்றால், சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீடுகளின் மதிப்பினை வழக்குரை சொத்து விபரத்தில் நான் கூறவில்லை என்று சொன்னால், சரிதான். வீடுகள் பழையது என்பதால், அதன் மதிப்பை குறிப்பிடவில்லை.

3) நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு படிக்கத் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் வடபுறமாக உள்ள நிலத்திற்கு தனி வண்டித்தடமும், தென்புறமாக உள்ள நிலத்திற்கு தனி வண்டித்தடமும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு சொத்தில் உள்ள தென்புற பகுதியை ஏற்கனவே விற்பனை செய்துவிட்டதால், அதில் நான் பாக உரிமை கேட்கமுடியாது என்றாலும், வடபுற பகுதியில் உள்ள நிலத்திற்கு மட்டுமே பாகப்பிரிவினை கேட்கமுடியும் என்றாலும், சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் ஒற்றுமையுடன்தான் இருந்து வருகிறோம் என்றாலும், மற்ற பிரதிவாதிகளை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 01.05</u>

ஒப்பம் /மணி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.